## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.

## MC.No. 10 / 2021

## RW-1

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09-ம் நாள் செவ்வாய்க் கிழமை எதிர்மனுதாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3 ன் படி 09.09.2025 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | நாகராஜன் | **தொழில்** | : | என்எல்சி ஊழியர் |
| **த /பெ.** | : | மாரிமுத்து | **வசிப்பிடம்** | : | நெய்வேலி |
| **வயது** | : | 59 | **வட்டம்** | : | குறிஞ்சிப்பாடி |

**முதல் விசாரணை :**

நான் இந்த மனுவில் எதிர்மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எனது சாட்சியத்தை ஏற்று மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**(மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்கு வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது.)**